# ரெயில் நிலையங்களில் முககவசம் அணியாத பயணிகள்: ரூ. 1.45 லட்சம் அபராதம் வசூல்

சென்னை, ஏப்.20–

சென்னை ரெயில் நிலையங்களில் முகக்கவசம் அணியாத பயணிகளிடமிருந்து ரூ. 1 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய் அபராதமாக வசூலிக்கப்பட்டது.

கொரோனா பரவலை கட்டுப்படுத்த மத்தியமாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் முககவசம் அணியாமல் வெளியே வரும் நபர்களிடம் இருந்து ரூ.200 அபராதமாக வசூலிக்கப்பட்டு வருகிறது. அதேபோல் ரெயில் நிலையங்களில் முககவசம் அணியாமல் வரும் பயணிகளுக்கு ரூ.500 அபராதம் விதிக்கப்படும் என தெற்கு ரெயில்வே அறிவித்திருந்தது.

இந்த நிலையில் தெற்கு ரெயில்வேயின் சென்னை கோட்டத்தில் உள்ள அனைத்து ரெயில் நிலையங்களிலும் ரெயில்வே அதிகாரிகள் தீவிரமாக முககவசம் அணியாதவர்களை கண்காணித்தனர். அந்த வகையில் முககவசம் அணியாத பயணிகளிடம் இருந்து ரூ.1 லட்சத்து 45 ஆயிரம் அபராதம் வசூலிக்கப்பட்டது என்று தெற்கு ரெயில்வே சென்னை கோட்ட மக்கள் தொடர்பு அதிகாரி ஏழுமலை தெரிவித்தார். விழுப்புரம்

விழுப்புரம் ரெயில் நிலையத்திற்கு முககவசம் அணியாமல் வரும் பயணிகளிடம் இருந்து அபராதம் வசூலிக்கப்பட்டு வருகிறது. தெற்கு ரெயில்வே திருச்சி கோட்ட பாதுகாப்பு படை முதுநிலை கண்காணிப்பாளர் ராமகிருஷ்ணன் உத்தரவின் பேரில் நடந்த இந்த பணியில், பயணிகள் அனைவருக்கும் தெர்மல் ஸ்கேனர் மூலம் உடல் வெப்பநிலையை சோதனை செய்த பின்னரே ரெயில்நிலையத்துக்கு ள் அனுமதிக்கப்பட்டனர். அதோடு முககவசம் அணியாமல் வந்தவர்களிடம் ரூ.500 அபராதம் வசூலிக்கப்பட்டது.

விழுப்புரம் ரெயில்வே பாதுகாப்பு படை போலீஸ் இன்ஸ்பெக்டர் அருண்குமார் மற்றும் இருப்பு பாதை போலீஸ் இன்ஸ்பெக்டர் மோகன சுந்தர் தலைமையில் இரு குழுக்களாக பிரிந்து 24 மணி நேரமும் கண்காணித்து வருகின்றனர். கடந்த 2 நாட்களில் முககவசம் அணியாமல் வந்ததாக 52 பேரிடம் அபராதம் வசூலிக்கப்பட்டு இருப்பதாக போலீசார் தெரிவித்தனர்.



திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி அடுத்த திருமணி ஊராட்சி வெங்கடேசன்பட்டி கிராமத்தில் அண்ணா தி.மு.க. சார்பில் ஜி.எ. கோகுலகிருஷ்ணன் ஏற்பாட்டில் அமைக்கப்பட்ட தண்ணீர் பந்தலை இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேவூர் இராமச்சந்தி திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர்மோர், இளநீர், தர்பூசணி, கிர்ணி ஆகியவற்றை வழங்கினார். நகர செயலாளர் அசோக்குமார், ஆவின் துணை சேர்மன் பாரி. பாபு, அருகாவூர். அரங்கநாதன், நகர மாணவரணி செயலாளர் பிஸ்கட்.குமரன், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் எஸ். ஜோதிலிங்கம், முன்னாள் நகரமன்ற உறுப்பினர் ஆ.க. பிரபு, திருமணி ஒன்றிய குழு உறுப்பினர் ஹரிகிருஷ்ணன், ஒன்றிய பாசறை செயலாளர் சுகுமார், ஒன்றிய அம்மா பேரவை செயலாளர் பையூர். சதீஷ்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## தடுப்பூசி எடுத்துச் செல்ல ராணுவ விமானங்கள்

புதுடெல்லி, ஏப்.20–

நாட்டில் தடுப்பூசிகளின் தேவை அதிகரித்துள்ளதால், அதை வினியோகம் செய்வதற்காக ராணுவ விமானங்களை பயன்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

நாடு முழுவதும் தடுப்பூசிகளை எப்படி வினியோகம் செய்வது என்பது பற்றி அனைத்து துறைகளையும் பிரதமர் மோடி கேட்டு உள்ளார். அதன்படி பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் இன்று ராணுவ உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

தடுப்பூசி வினியோகத்துக்காக ராணுவ விமானங்களை இயக்குவது பற்றி கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. மேலும் தடுப்பூசியை எடுத்து செல்ல ராணுவ வாகனங்களை கொடுத்து உதவுவது பற்றியும் ராஜ்நாத்சிங் ஆய்வு செய்தார். அதன்படி ஐதராபாத், புனே நகரங்களில் இருந்து தடுப்பூசிகளை கொண்டு செல்ல சிறப்பு ராணுவ விமானங்கள் இயக்கப்பட உள்ளன.

## டெல்லியில் கொரோனா பாதிப்பால் நீதிபதி உயிரிழப்பு

புதுடெல்லி,ஏப்.20–

டெல்லியில் கொரோனா வைரசால் பாதிப்பட்ட நீதிபதி வேணுகோபால் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்தியாவில் கொரோனா வைரசின் 2வது அலை மிகவும் வேகமாக பரவி வருகிறது. பொதுமக்கள், நீதித்துறையினர், அரசியல் கட்சியினர் உள்பட அனைத்து தரப்பினரும் தினந்தோறும் தொற்றால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இதற்கிடையில் டெல்லியில் உள்ள மாவட்ட குடும்ப நல நீதிமன்றத்தில் நீதிபதியாக செயல்பட்டு வருபவர் கோவை வேணுகோபால். 47 வயதான அவருக்கு கடந்த வாரம் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து அவர் டெல்லி லோக் நாயக் ஜெய் பிரகாஷ் நாராயன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நீதிபதி வேணுகோபால் நேற்று உயிரிழந்தார்.

## புதுவையில் இன்று 638 பேருக்கு கொரோனா

புதுவை,மார்ச்.20 –

புதுவையில் இன்று புதிதாக 638 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இவர்களில் 465 பேர் புதுவையிலும் 99 பேர் காரைக்காலிலும் 42 பேர் ஏனாமிலும் 32 பேர் மாகேயிலும் அரசு மருத்துவ மனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். கடந்த 24 மணி நேரத்தில் கொரோனா பாதித்து சிகிச்சை பெறுவோரில் 4 பேர் இறந்தனர். இன்று மட்டும் 255 பேர் குணமடைந்து வீடு திரும்பினர்.

கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டு சிகிச்சை பெற்று வருவோர் எண்ணிக்கை 5073 ஆனது. இவர்களில் 741 பேர் புதுவையில் தனிமையிலும் 56 பேர் காரைக்காலிலும் 24 பேர் மாகேயிலும் 83 பேர் ஏனாமிலும் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். 4169 பேர் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டு அவரவர் வீடுகளில் தங்கிச் சிகிச்சை பெறுகிறார்கள். இதுவரை தொற்று பாதித்து அரசு மருத்துவ மனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்கள் மொத்தம் – 48 974 பேர். அவர்களில் 717 பேர் சிகிச்சை பலனின்றி இறந்தனர். குணமடைந்து வீடு திரும்பியவர்கள் – 43 184 பேர் ஆவார்கள்.

## நாளை மின்தடை

சென்னை, ஏப். 20

சென்னையில் நாளை (21ந் தேதி) காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மின் வாரிய பராமரிப்பு பணி காரணமாக 6 பகுதிகளில் மின் விநியோகம் நிறுத்தப்படும்.

மாலை 5 மணிக்குள் பராமரிப்பு பணி முடிவடைந்தவுடன் மின் விநியோகம் கொடுக்கப்படும்.

சோத்துப்பெரும்பேடு பகுதி : காரனோடை பஜார், சண்முகம் நகர், ஆத்தூர், பஸ்தபாளயம், வீஜிபிமேடு.

பட்டாபிராம் பகுதி : வீ.ஜி என் டைனசின்டி, ஐயப்பா நகர், தனலட்சுமி நகர், மேல்பாக்கம், அருணாச்சலம், சி டி எச் சாலை, பாரதியார் நகர், எம்.ஜி ரோடு, நேரு நகர், சஞ்சீவி நகர் மற்றும் மேற்காணும் பகுதிகளின் அருகிலும்.

பெரம்பூர் பகுதி: சிட்கோ நகர் 1 முதல் 10 வது பிளாக், சி.டி. எச் ரோடு, நேரு நகர், சத்யா நகர், அம்மன்குட்டை, ராஜாஜி நகர் பகுதி, பாளையம்மன் கோயில் தெரு, நியூ ஆவடி ரோடு, வில்லிவாக்கம் பகுதி மற்றும் மேற்காணும் பகுதிகளின் அருகிலும்.

ஆழ்வார்பேட்டை பகுதி : டி.டி. கே.ரோடு பகுதி மற்றும் முதல் குறுக்கு தெரு, சி.வி ராமன் ரோடு, சி.பி ராமசாமி ரோடு, ஆனந்தா ரோடு, ஆனந்தபுரம், ஆர்.ஏ.புரம், சீமன் சினிவாச ரோடு, பார்தசாரதி கார்டன் தெரு, ஆழ்வார்பேட்டை மெயின் ரோடு மற்றும் மேற்காணும் பகுதிகளின் அருகிலும்.

புழல் பகுதி : புழல் பகுதி, நாகப்பா எஸ்டேட், எம்.ஜி,ஆர் நகர், ஒட்றவடை, ரெட்டை மலை, பாலாஜி நகர், மேக்ரோ மார்வல் நகர்.

ஆவடி செந்தில் நகர் : ரவிந்தர் நகர், ஸ்ரீநகர் காலனி, சோழன் நகர், ஸ்ரீனிவாசா நகர் மற்றும் மேற்காணும் பகுதிகளின் அருகிலும். இவ்வாறு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் தெரிவித்துள்ளது.

# தமிழகத்தில் புதிய கட்டுப்பாடுகள்...

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

காலை 4 மணி வரை பேருந்துகள் உள்ளிட்ட பொதுப்போக்குவரத்துக்குத் தடை விதிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து நெடுந்தூரம் செல்லும் பயணிகளின் வசதிக்கேற்ப பகல் நேரத்தில் விரைவுப் பேருந்துகள் இயக்கப்படும் என அரசுப் போக்குவரத்துக் கழகம் சார்பில் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனவே வெளியூர் பேருந்து சேவை இன்று காலை 4 மணி முதலே தொடங்கியுள்ளது. பயணிகள் அந்தந்த மாவட்டங்களுக்கு இரவு 8 மணிக்குள் சென்றடையும் வகையில் பேருந்துகள் புறப்படும் நேரம் திட்டமிடப்பட்டுள்ளது.

### குறைவான கூட்டம்

கொரோனா அச்சம் காரணமாக பேருந்துகளில் கூட்டம் குறைவாகவே காணப்பட்டது. அதிலும் தென் மாவட்டங்களுக்குச் செல்லும் பேருந்துகளிலும் கூட்டம் குறைவாகவே இருந்தது. சுமார் 20 பயணிகள் இருந்தால் மட்டுமே பேருந்துகள் புறப்படுகின்றன. காலை 10 மணி நிலவரப்படி கோயம்பேட்டிலிருந்து வெளிமாநிலங்களுக்கு 80 பேருந்துகள் மட்டுமே இயக்கப்பட்டுள்ளன. சென்னையிலிருந்து நெல்லை, கன்னியாகுமரி, தூத்துக்குடி ஆகிய தென் மாவட்டங்களுக்கு காலை 9.30 மணிக்கு கடைசிப் பேருந்து இயக்கப்பட்டது. பயணம் நேரம் சுமார் 10 மணி நேரத்துக்குமேல் இருக்கும் என்பதால் இந்த நடைமுறை. ஈரோடு, கோவைக்கு காலை 8 மணியோடு பேருந்துகள் நிறுத்தப்பட்டது. திருச்சி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டத்துக்கு மதியம் 12 மணி வரையிலும், கடலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் உள்ளிட்ட வட மாவட்டங்களுக்கு மாலை 6 மணி வரையிலும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

திருப்பதிக்கு செல்லும் பேருந்துகள் வேலூர் வரை மட்டுமே இயக்கப்படுவதாகவும், பெங்களூரு செல்லும் பேருந்துகள் ஒசூர் வரை மட்டுமே இயக்கப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் கு.இளங்கோவன் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

கொரோனாவை கட்டுப்படுத்தும் வகையில், அரசு விதித்துள்ள இரவு நேர ஊரடங்கைக் கருத்தில் கொண்டு பொதுமக்களுக்கு வசதியாக சென்னையிலிருந்து குறுகிய மற்றும் தொலைத்தூர ஊர்களுக்கும், பிற ஊர்களிலிருந்து சென்னைக்கும் இயக்கப்படுகின்ற பேருந்துகள் அதிகாலை 4 மணி தொடங்கி இரவு 8 மணிக்குள்ளாக சென்றடையும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஞாயிற்றுக்கிழமைகளில் முழு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளதால், அன்றைய தினம் பேருந்துகள் இயக்கப்பட மாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### சென்னையில் 200 இடங்களில் சோதனை

இரவு ஊரடங்கையொட்டி சென்னையில் 200 இடங்களில் வாகனச் சோதனை செய்யப்படுகிறது. 38 பெரிய மேம்பாலங்களையும், 75 சிறிய வகை மேம்பாலங்களையும் தடுப்பு வேலிகள் மூலம் போலீசார் மூடுகின்றனர். சுமார் 500 வாகனங்களில் போலீசார் நகர் முழுவதும் ரோந்து செல்கின்றனர். பொதுமக்கள் நடமாட்டத்தைக் கண்காணிக்கும் வகையில் குடியிருப்புப் பகுதிகளில் ஆளில்லாதக் கண்காணிப்பு விமானம் (ட்ரோன்) மூலம் கண்காணிக்கப்பட உள்ளது.

உள்ளூர் போலீசாரைத் தவிர்த்து, ஆயுதப்படை, சிறப்புக் காவலர் படை ஆகியவற்றைக் கொண்ட தனிப்படையினரும் ரோந்துப் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

### 1000 இடங்களில் தடுப்பு

வாகனப் போக்குவரத்தை முற்றிலும் தடுக்கும் வகையில் அண்ணா சாலை, காமராஜர் சாலை, ராஜீவ்காந்தி சாலை, 100 அடி சாலை, பூந்தமல்லி நெடுஞ்சாலை, டாக்டர் ராதாகிருஷ்ணன், எல்.பி. சாலை, ஜி.எஸ்.டி. சாலை, ராஜாஜி சாலை, ஆற்காடு சாலை, ரேடியல் சாலை, கிழக்கு கடற்கரைச் சாலை உள்ளிட்ட முக்கியமான சாலைகளின் நடுவே சுமார் ஆயிரம் இடங்களில் தடுப்புகள் அமைக்கப்படுகின்றன.

### புதுவையில்..

புதுவையிலும் கொரோனா தொற்று பரவலைக் கட்டுப்படுத்தும் விதமாக, இன்று முதல் இரவுநேர ஊரடங்கு அமல்படுத்தப்படவுள்ளது. அதன்படி, தினமும் இரவு 10 மணி முதல் காலை 5 மணி வரை முழு ஊரடங்கு கடைப்பிடிக்கப்படுகிறது. உணவு விடுதிகள் காலை முதல் மாலை வரை வழக்கம் போல் செயல்படவும், இரவு 8 மணிக்குப்பின் பார்சல் மட்டுமே வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. உணவு விடுதிகள், மதுக்கடைகள் போன்ற இடங்களில் வாடிக்கையாளர்கள் அமர்வதற்கு தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமைகளில் முழு ஊரடங்கு அமல்படுத்துவது தொடர்பாக, அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய பிறகு முடிவு செய்யப்படும் என்று கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# முக கவசம் அணிந்து வந்தால் மட்டுமே மது விற்பனை

சென்னை, ஏப்.20

முக கவசம் அணிந்து வந்தால் மட்டும் மது விற்பனை என்று டாஸ்மாக் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

கொரோனாவின் 2வது அலையை சமாளிக்க இன்று முதல் இரவு ஊரடங்கு அமல்படுத்தப்பட உள்ளது. டாஸ்மாக் கடைகள் இரவு 9 மணி வரை மட்டுமே இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது டாஸ்மாக் கடை ஊழியர்களுக்கு பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளது.

அதன் விவரம் வருமாறு:–

★ டாஸ்மாக் கடைகளில் எந்தவொரு கூட்ட நெரிசலும் இருக்கக்கூடாது.

★ வாடிக்கையாளர்களுக்கு இடையே குறைந்தபட்சம் 6 அடி சமூக இடைவெளியை பின்பற்ற வேண்டும்.

★ ஒரே நேரத்தில் கடையின் உள்ளே 3 பேருக்கு மேல் இருக்கக்கூடாது.

★ கடை ஊழியர்கள் 3 அடுக்கு முக கவசம், முகமூடி, கையுறைகள் மற்றும் குறிப்பிட்ட கால இடைவெளியில் கிருமிநாசினி திரவத்தை கட்டாயம் பயன்படுத்த வேண்டும்.

★ கடையை சுற்றிலும் பிளீச்சிங் பவுடரை தூவ வேண்டும்.

★ 2 ஊழியர்கள் கடையின் வெளிப்புறம் நின்று மதுப்பிரியர்களை சமூக இடைவெளியை பின்பற்றி வர செய்வதும், முக கவசம் அணிந்து வர செய்வதும் மற்றும் விற்பனை பணியை மேற்கொள்ள வேண்டும்.

★ மதுப்பிரியர்களை கடையின் அருகில் மது அருந்த அனுமதிக்கக்கூடாது. கடையில் அதிக கூட்டம் சேராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

★ முக கவசம் அணிந்து வரும் மதுப்பிரியர்களுக்கு மட்டும் மது விற்பனை செய்ய வேண்டும்.

★ எக்காரணம் கொண்டும் மதுபானங்களை மொத்தமாக விற்பனை செய்யக்கூடாது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



வேடந்தாங்கல், எண்டத்தூர், வேலாமூர் ஆகிய பகுதிகளில் அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் பெரும்பாக்கம் சி.விவேகானந்தன் ஏற்பாட்டில் நீர் மோர் பந்தலை செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ்.ஆறுமுகம் திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர்மோர், தர்பூசணி, இளநீர் மற்றும் பழவகைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட மகளிரணி செயலாளர் கே.மரகதம்குமரவேல், துணைச் செயலாளர் ஏ.எஸ்வந்திரன், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் ஆனூர் வி.பக்தவச்சலம், மதுராந்தகம் வடக்கு ஒன்றிய செயலாளர் கோ.அப்பாதுரை, தெற்கு ஒன்றிய செயலாளர் முதுகரை வி.கார்த்திகேயன், அச்சரப்பாக்கம் தெற்கு ஒன்றிய செயலாளர் அனந்தமங்கலம் பி.சுப்பிரமணியன், இளைஞர் பாசறை கிளை செயலாளர் தீட்டாளம் ம.தாவீதுராஜா மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# திருவண்ணாமலை ஒன்றியச் செயலாளர் மறைவு: எடப்பாடி, ஓ.பி.எஸ். இரங்கல்

**சென்னை, ஏப்.20–**

**திருவண்ணாமலை வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.கே. குமாரசாமி காலமானார்.**

இதுகுறித்து அண்ணா தி.மு.க. இணை ஒருங்கிணைப்பாளரும், முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி, கட்சியின் ஒருங்கிணைப்பாள ரும், துணை முதலமைச்சருமான ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது:–

திருவண்ணாமலை தெற்கு மாவட்டம், திருவண்ணாமலை வடக்கு ஒன்றியச் செயலாளரும், வேங்கிக்கால் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவரும், ஊராட்சி ஒன்றியக்குழு முன்னாள் தலைவருமான ஏ.கே. குமாரசாமி உடல்நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி மரணமடைந்து விட்டார் என்ற செய்தி கேட்டு வருத்தமுற்றோம்.

புரட்சித் தலைவி அம்மா மீது மிகுந்த விசுவாசம் கொண்டு, கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக ஒன்றிய செயலாளராகப் பணியாற்றி வந்த குமாரசாமி, கழகப் பணிகளையும், மக்கள் பணிகளையும் திறம்பட ஆற்றி வந்துள்ளார்.

அன்புச் சகோதரர் குமாரசாமியை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்களுக்கும் இந்தத் துயரத்தை தாங்கிக் கொள்ளக்கூடிய சக்தியையும், தைரியத்தையும் அளிக்க வேண்டும் என்றும், அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாறவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இவ்வாறு ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி ஆகியோர் கூறியுள்ளனர்.




தமிழ்மாநில காங்கிரஸ் துணைத் தலைவர் கத்திப்பாரா ஜெனார்த்தனின் 75 வது பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு மண் அள்ளும் இயந்திர உரிமையாளர்கள் நல சங்கத்தின் சார்பில் கொரோனா தடுப்பு ஊசி பொது மக்களுக்கு கிடைத்திட இலவச வாகன சேவையை தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் எம்.பி கொடி அசைத்து துவக்கி வைத்தார். கீதா ஜெனார்த்தனன், கத்திபாரா விகேக், தென் சென்னை வடக்கு மாவட்ட தலைவர் சைதை மனோகரன், மாநில நிர்வாகிகள் அசோகன், சைதை நாகராஜன், தி நகர் கோதண்டன், சுந்தரவதனன், கோவூர் வெங்கடேசன், கிண்டி மம்மு, கோயில் பாஸ்கர், அறிவொளி நாகராஜன், சந்திரஹாசன், வின்சென்ட் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.


**EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: 1/24, ஜி.எஸ்.டி ரோடு, மீனம்பாக்கம், சென்னை–600027.
CIN: L92490TN1983PLC009903
Website: www.eihassociatedhotels.in
Phone: 91-44-22344747, Fax: 91-44-22346699

**அறிவிப்பு**

செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 29 மற்றும் 47ன்படி, இதர அலுவலகளுக்கு இடையே 31 மார்ச், 2021ல் முடிந்த காலாண்டு/நிதி ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து, ஒப்புதல் அளித்து, பதிவு செய்யவும் மற்றும் டிவிடெண்ட் ஏதேனும் இருப்பின் அதனை பரிந்துரைக்கவும் கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் செவ்வாய்க்கிழமை, 4 மே 2021 அன்று நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு கம்பெனியின் இணைய தளம் www.eihassociatedhotels.in மற்றும் ஸ்டாக் எச்சேஞ்சுகளின் இணைய தளங்கள் www.bseindia.com மற்றும் www.nseindia.comலும் உள்ளது.

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்டுக்காக
இந்த்ராணி ரே
கம்பெனி செயலாளர்

கொல்கத்தா
19 ஏப்ரல் 2021



**மாண்புமிகு புதுக்கோட்டை கூடுதல் மாவட்ட நீதிமன்றம் முன்பாக**

***MCOP.No:268/2018***

*சித்தி அஸ்மா பேகம்,*
*த/பெ.லேட்.சேட் முகம்மது,*
*கதவு எண்.8/1/18,*
*N.PL.N.Street, நெற்குப்பை,*
*திருப்பத்தூர் தாலுகா,*
*சிவகங்கை மாவட்டம்.*
*..மனுதாரர்கள்*

*எதிராக*

*அக்பர் அலி,*
*த/பெ.அன்சார்,*
*"ஏ" பிளாக், நெ.37, 4–வது தெரு,*
*TNSLB Sakthi Nagar,*
*West Tambaram, Chennai.*
*..3–ம் எதிர்மனுதாரர்*

**அறிவிப்பு**

*கடந்த* **02.06.2018**–*ம் தேதி அன்று சாலை விபத்தில் காயமுற்ற* **சித்தி அஸ்மா பேகம்** *என்பவர் சமூக நீதிமன்றத்தில் அசல் மனு தாக்கல் செய்து அந்த அசல் மனு வழக்கும் 3–ம் எதிர்மனுதாரர் ஆஜர் ஆவதற்காக எதிர்வரும்* **18.06.2021** *அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி வாய்தா தேதியன்று தாங்கள் காலை* **10.30** *மணிக்கு நேரிலோ அல்லது தங்களது வழக்கறிஞர் மூலமாகவோ மேற்படி தேதியில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் அன்றைய தினம் மேற்படி வழக்கும் தங்களுக்கு எதிராக அன்றைய தேதியில் சமூகம் அவர்களால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் தங்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.*

**எஸ்.சொக்கலிங்கம் B.Sc.,B.L.,**
**அட்வகேட்,**
**புதுக்கோட்டை.**



**சுவாதீனம் எடுத்த அறிவிப்பு – (அசையா சொத்து) விதி 8–(1)**

கீழே கையொப்பமிட்டுள்ள ஐஐஎப்எல் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்டின் (முன்னர் இந்தியா இன்போலைன் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்) (ஐஐஎப்எல் எச்எப்எல்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(12)வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 3வது விதிமுறையின் கீழும் கடன்தாரர்கள்/ உடன்கடன்தாரர்கள் ஆகியோருக்கு அனுப்பிய டிமாண்டு நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ளபடி செலுத்த வேண்டிய தொகையை மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார். கடன்தாரர் மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுகிறது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டத்தின் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன 8வது விதிமுறைக்கு இணங்கவும் சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன்தாரருக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக் கொண்ட இந்த சொத்து ஐஐஎப்எல் எச்எப்எல்–க்கு திரும்ப செலுத்த வேண்டிய தொகை மற்றும் வட்டிக்கும் பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித வில்லங்கமும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
சட்டப்பிரிவு 13, துணைப்பிரிவு (8)ன்படி கடன்தாரர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்படுவது யாதெனில், 'ஐஐஎப்எல் எச்எப்எல்''–க்கு செலுத்த வேண்டிய பாக்கித்தொகை, அனைத்து செலவுகள், கட்டணங்கள் மற்றும் ஏற்பட்ட செலவுகள் ஆகியவற்றை கடன்தாரர் விற்பனை அல்லது மாற்ற நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்னதாக எப்போது கட்டினாலும் ஈடு பெற்ற ஆஸ்திகள் விற்பனை செய்யப்படாது அல்லது மாற்றப்படாது மற்றும் ஈடுபெற்ற ஆஸ்திகளை விற்க அல்லது மாற்றும் நடவடிக்கைகளை ''ஐஐஎப்எல் எச்எப்எல்'' மேற்கொள்ளாது.

| கடன்தாரர்(கள்) பெயர் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் கிளை | ஈடுபெற்ற ஆஸ்திகள் விவரம் (அசையா சொத்து) | செலுத்த வேண்டிய பாக்கித்தொகை (ரூ.) | டிமாண்ட் நோட்டீஸ் தேதி | சுவாதீன தேதி |
|---|---|---|---|---|
| 1. திரு. ஆனந்த ஜோதி எஸ் 2. திருமதி. ஆனந்த ஜோதி எஸ் (புராஸ்பெக்ட் எண்.723004) | ப்ளாட் எண். 1–208ல் உள்ள சொத்து மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும். விஸ்தீரணம் சூப்பர் ஏரியா 629 சதுர அடி மற்றும் பிரிவுபடாத பங்கு 236 சதுர அடி. இரண்டாவது மாடி, பிளாக் எண். 1, பேஸ் எண். 5, டெம்பிள் வேவ்ஸ்,குன்றத்தூர் கிராமம், குன்றத்தூர் டவுன் பஞ்சாயத்து, திருமுடிவாக்கம், காஞ்சிபுரம் | ரூ. 19,11,230.00/– | 15/12/20 | 17 ஏப்ரல் 21 |
| 1. ராஜேஷ் பி மற்றும் 2. திருமதி. ஸ்ரீதேவி ஆர் (புராஸ்பெக்ட் எண்.731911) | ப்ளாட் எண். எப்–2ல் உள்ள சொத்து மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும். விஸ்தீரணம் 555 சதுர அடி (பிரிவுபடாத பங்கு 222 சதுர அடி) முதல் மாடி ஹாப்பி ஹோம்ஸ், கதவு எண். 101 பள்ளி தெரு, சூளைமேடு பிரதான சாலை, திருமுல்லைவாயல், சென்னை, தமிழ்நாடு 600 062. | ரூ. 23,50,176.00/– | 18–01–21 | 17 ஏப்ரல் 21 |
| திருமதி. ஆர். வனிதா மற்றும் திரு. கோவிந்தராஜ் என் (புராஸ்பெக்ட் எண்.909417) | ப்ளாட் எண். 18ல் உள்ள சொத்து மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும். விஸ்தீரணம் சூப்பர் ஏரியா 40.17 சதுர மீட்டர்கள், முதல் மாடி, பிளாக் 10, சர்வே எண். 620, டிஎன்எச்பி, திருமுல்லைவாயல் கிராமம், அம்பத்தூர் தாலுக்கா, சென்னை, தமிழ்நாடு, இந்தியா 600 062. | ரூ. 18,31,743.00/– | 09–மார்ச்–20 | 17 ஏப்ரல் 21 |
| 1. திருமதி சுகந்தி வி 2. திரு. பாலசுந்தர் (புராஸ்பெக்ட் எண்.922789 and 851610) | ப்ளாட் எண். 331ல் உள்ள சொத்து மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும். பழைய எண்.20, புதிய எண். 18 தேவி நகர் அனெக்ஸ், லோட்டஸ் அபார்ட்மெண்ட், நெமிலிச்சேரி திருவள்ளூர், சென்னை 602 024, தமிழ்நாடு இந்தியா. | ரூ. 4,62,543.00 vide prospect no 922789 Rs.21,45,308.00/ vide prospect no 851610/– | 18–ஜன–21 | 17 ஏப்ரல் 21 |
| திரு. விஜயகுமார் சோமசுந்தரம் மற்றும் திருமதி வசந்தா சோம சுந்தரம் (புராஸ்பெக்ட் எண். IL10001790) | மனை எண். 25ல் உள்ள சொத்து மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும். சாய் கோல்டன் லேன் வெற்றி ரியல்ஸ், விஸ்தீரணம் 1000 சதுர அடி ஸ்ரீ சாய் கோல்டன் ஹோம்ஸ் பார்ட் –1 எண். 45, ஆத்தூர் ஏ பிளாக் கிராமம் செங்கல்பட்டு சென்னை, தமிழ்நாடு. | ரூ. 9,90,948.00/– | 11/01/21 | 17 ஏப்ரல் 21 |

மேற்கொண்டு விவரங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கிளை அலுவலகம்:– 10/01, 56எல், 9வது தளம், பாஸ்கான் பியூச்சரா டவர், வெங்கட்நாராயணா சாலை, தி. நகர், சென்னை – 600 0017 மற்றும்/அல்லது காமராஜர் தெரு, 107, முதல் மாடி, காஞ்சிபுரம், தமிழ்நாடு 631 501 மற்றும்/அலலது எண். 120, முதல் மாடி, சாந்தி பில்டிங், சென்னை ஜெஎன் ரோடு திருவள்ளூர், தமிழ்நாடு 620 001 மற்றும்/அல்லது கார்ப்பரேட் அலுவலகம்: மனை எண். 98, பேஸ்–IV, உத்யோக் விஹார், குர்கான், ஹரியானா அவர்களை அணுகலாம்

இடம் : சென்னை/திருவள்ளூர்/காஞ்சீபுரம், தேதி 20/04/021 ஒப்பம்/–அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஐஐஎப்எல் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்டிற்காக



Muthoot Finance

**முத்தூட் ஹோம்பின் (இந்தியா) லிமிடெட்**

கார்ப்பரேட் அலுவலகம்: 1201 & 1202, 12வது மாடி, 'ஏ' விங், லோட்டஸ் கார்ப்பரேட் பார்க், ஆப்: வெஸ்ட்ரன் எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலை, கொரேகான் (கிழக்கு), மும்பை 400 063.

**டிமாண்ட் நோட்டீஸ்**

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13 (2) மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 3(1)ன் கீழ் அறிவிப்பு
கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (சட்டம்), மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 3ன் கீழ், கீழ்க்கையொப்பமிட்டுள்ள முத்தூட் ஹோம்பின் (இந்தியா) லிமிடெட்டின் (எம்எச்ஐஎல்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள் மேற்சொன்ன சட்டப்பிரிவு 13(2)ன் கீழ் கீழ்க்கண்ட கடன்தாரர்(கள்) (''மேற்சொன்ன கடன்தாரர்'') அவர்களுக்கு டிமாண்ட் நோட்டீஸ்களை அனுப்பி அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை திரும்பச் செலுத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.
இது தொடர்பாக மேற்சொன்ன கடன்தாரர்(கள்) எம்எச்ஐஎல்–லுக்கு மேற்சொன்ன கடன்தாரர் கடன் ஒப்பந்தம் மற்றும் இதர ஆவணங்கள்/ எழுத்துபூர்வமான ஒப்புக்கொண்டபடி கீழ்க்குறிப்பிட்டுள்ள தொகை மற்றும் திரும்ப செலுத்தும் நாள் வரையில் 2% மேலும் வட்டி ஆகியவற்றை இந்த அறிவிப்பு வெளியான 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்று இதன் மூலம் மீண்டும் அறிவிக்கப்படுகிறது. கடனை திரும்ப செலுத்துவதற்காக மேற்சொன்ன கடன்தாரர்கள் கீழ்க்கண்ட ஈடு பெற்ற ஆஸ்திகளை எம்எச்ஐஎல் வசம் அடமானமாக வைத்துள்ளனர்.

| வ. எண் | கடன்தாரர்(கள்)/ உடன்கடன்தாரர் (கள்)/ பெயர்/ கடன் கணக்கு எண்./ கிளை | செலுத்த வேண்டிய பாக்கித் தொகை (ரூ.) | டிமாண்ட் நோட்டீஸ் தேதி | ஈடுபெற்ற ஆஸ்திகள் (அசையா சொத்துக்கள்) விவரம் |
|---|---|---|---|---|
| 1. | ஆகாஷ் தயானந்த குமார்/ அஜித் குமார் டி/ தயானந்த குமார் எஸ்/ கவிதா டி/ 086–08600125/ சென்னை | ரூ. 1,451,719/– (ரூபாய் பதினான்கு லட்சத்து ஐம்பத்து ஓராயிரத்து எழுநூற்று பத்தொன்பது மட்டும்) | 12–ஜன–21 | அசையா சொத்துக்கள் எஸ்.எண். 253/1பி, மனை எண். 4/556, டிஎன்எச்பி மணலி பேஸ் – I திட்டம், மணலி நியூ டவுன், சென்னை 600 103. விற்பனை பத்திரம் பதிவு எண். 57/2020 தேதி 06–01–2020. திருவொற்றியூர்–சென்னை சார்பதிவாளர் அலுவலகம், எல்லைகள்: வடக்கு: மனை எண். 555, தெற்கு: மனை எண்.557, கிழக்கு: 16 அடி பொது சாலை, மேற்கு: மனை எண். 703. |

மேற்சொன்ன கடன்தாரர்கள் எம்எச்ஐஎல்–க்கு தொகையை செலுத்த தவறினால், சட்டப்பிரிவு 13(4) மற்றும் பொருந்தக்கூடிய விதிகளின் கீழ் மேற்சொன்ன ஈடுபெற்ற ஆஸ்திகள் மீது நடவடிக்கையை எம்எச்ஐஎல் மேற்கொள்ளும். அதற்காக ஏற்படும் செலவுகள் மற்றும் விளைவுகள் மேற்சொன் கடன்தாரர்களையே சாரும்.

எம்எச்ஐஎல்–ன் எழுத்துப்பூரமான ஒப்புதலின்றி மேற்சொன்ன கடன்தாரர்கள் சட்டப்படி மேற்சொன்ன ஈடுபெற்ற ஆஸ்திகளை விற்றல், குத்தகைக்கு விடுதல் போன்ற மாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது. மேற்சொன்ன சட்டம் மற்றும் விதிகளை மீறினால் சட்டத்தின் கீழ் சிறை தண்டனை அனுபவிக்க நேரிடும் மற்றும்/அல்லது அபராதம் விதிக்கப்படும்.

இடம்: சென்னை
தேதி: 20.04.2021

ஒப்பம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
முத்தூட் ஹோம்பின் (இந்தியா)லிமிடெட்